13.11.2025.

<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )</u>

<u>விழுப்புரம்</u>

<u>அமர்வு வழக்கு எண்.205/2018</u>

அ.சா.38

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. ஜோசப்செல்வராஜ் | | |
| த/பெ | எஸ். அந்தோணிராஜ் | | |
| கிராமம் | சென்னை | தொழில் | காவல் ஆய்வாளர் |
| தாலுக்கா | சென்னை | வயது | 55/2025 |
| மாவட்டம் | சென்னை | தேதி | 13 .11.2025 |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிராமணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது சென்னை அண்ணா நகர் காவல் நிலையத்தில் குற்றப்பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14/05/2014 ம் தேதி விழுப்புரம் இருப்பு பாதை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது, விழுப்புரம் இருப்புப் பாதை காவல் நிலைய குற்ற எண்.25/2014 இ.த.ச. பிரிவு.379 மற்றும் கு.எண்.26/2014 பிரிவு 176 கு. வி.மு.ச ஆகிய இரு வழக்குகளும் மாறுதலாகி விழுப்புரம் சிபிசிஐடி போலீசார் வசம் விசாரணையில் இருந்து வந்தது. திருச்சி இருப்புப் பாதை துணை காவல் கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின் படி விழுப்புரம் இருப்புப் பாதை காவல் நிலைய பதிவேடுகள், பொதுநாட்குறிப்பு, ரப் டியூட்டி ரோஸ்டர், டியூட்டி ரோஸ்டர், சென்ட்ரி புக், பி எஸ் ஆர், எஃப் ஐ ஆர் இண்டெக்ஸ், அப்போது எழுத்தராக இருந்த தலைமை காவலர், ஆகியவைகளை திருச்சி மாவட்ட காவல்துறை துணை

கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின்படி சிபிசிஐடி காவல் ஆய்வாளர்களும், புரொடக்ஷன் மெமோ மூலம் நானும், எனது எழுத்தாளர் சிவகுமார் மற்றும் விழுப்புரம் சிபிசிஐடி ஆய்வாளர் வசம் ப்ரொடக்ஷன் மெமோவில் நாங்கள் மூவரும் கையெழுத்திட்டு ஒப்புவித்தோம். அந்த புரொடக்ஷன் மெமோவில் உள்ள எனது கையெழுத்து என்னிடம் காட்டப்படுவது தான். அந்த ப்ரொடக்ஷன் மெமோவில் உள்ள எனது கையெழுத்துகள் எண்ணிக்கை - 2 அ.சா.ஆ.34 ஆகும். (அந்த ப்ரொடக்ஷன் மெமோ அ.சா.ஆ. 19 மற்றும் 20 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது). மேலும் மேற்படி நாங்கள் ஒப்புவித்த (மேற்சொன்ன அந்த 6 ஆவணங்களும் அ.சா.13 முதல் அ.சா.18 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது). இது சம்பந்தமாக வேலூர் குற்றப்பிரிவு புலனாய்வுத்துறை காவல் ஆய்வாளர் அவர்கள் விசாரணை செய்தார்கள். விசாரணையில் மேற்படி சங்கதிகளை நான் சொல்லிக் கொண்டேன்.

<u>1, 3 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

குற்ற எண்கள் 25/2014, 26/2014 வழக்கு தொடர்பான ஆவணங்களை எதன் அடிப்படையில் அவர்கள் வசம் ஒப்படைக்க வேண்டும் என்று சிபிசிஐடி போலீசார் எழுத்து மூலமாக ஏதாவது வேண்டுகோள் கடிதமோ, அல்லது மேலதிகாரிகளின் உத்தரவுகளையும் எனக்கு வழங்கினார்களா? என்றால் இல்லை. வாய்மொழி உத்தரவு தான். அந்த வாய்மொழி உத்தரவை யார் சொன்னார்கள் என்ற விவரத்தை நான் சிபிசிஐடி போலீசாரிடம் சொன்னேனா என்றால், இல்லை. இந்த வழக்கு சம்பந்தமான ஆவணங்களை பெற்றுக் கொண்டதற்காக சிபிசிஐடி போலீசார் எழுத்து மூலமாக ஒப்புதல்களை கொடுத்தார்களா? என்றால், ப்ரொடக்ஷன் மெமோவில் கையெழுத்து போட்டுக் கொடுத்தார்கள். தனியாக ஒப்புதல் எதுவும் அளிக்கவில்லை. நான் சொன்ன தேதியில் எந்த ஆவணங்களையும் சிபிசிஐடி போலீசார் வசம் நான் ஒப்படைக்கவில்லை என்றும், செப்டம்பர் 2024 ஆம் வருடம் தான் நான் இந்த ஆவணங்களை சிபிசிஐடி போலீசார் வசம் ஒப்படைத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. ப்ரொடக்சன் மெமோ ஒப்படைக்கப்பட்டது குறித்து நான் சிவகுமாரிடம் சொன்னேனா என்றால், நாங்கள் இருவரும் ஒரே அலுவலகத்தில் பணிபுரிந்ததால், அதற்கான அவசியம் இல்லை.

**2, 4, 5 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-**

இந்த ஆவணங்கள் அனைத்தையும் தயார் செய்த பிறகு ஆவணங்கள் உடனடியாக நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டதா? என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது. சிபிசிஐடி வசம் தான் அந்த ஆவணம் உள்ளது. அவர்களுக்குத்தான் தெரியும். அந்த வழக்கின் கோப்புகள் நான் வருவதற்கு முன்பே சிபிசிஐடி வசம் விசாரணையில் இருந்தது. அந்த ஆவணங்கள் நாங்கள் சமர்ப்பித்த பிறகு தான் சிபிசிஐடி வசம் சென்றது. அதனால் அதற்கு முன்பு ஆவணங்களை நாங்கள் உடனடியாக நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளோமா? என்றால், இல்லை. இந்த வழக்கின் விவரங்கள் எனக்கு தெரியாது.

**மறுவிசாரணை**

**இல்லை**